Q.P. Code : 32107

First Semester B.A./B.Sc./B.C.A./B.Sc.(FAD)/B.Com./B.B.A./B.H.M.

Degree Examinations, November/December 2019

*(CBCS Scheme – Freshers – 2019-20 and onwards)*

## TAMIL LANGUAGE

### Part-I, Paper-I

*Time : 3 Hours]* *[Max. Marks : 70*

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

**(5 × 1 = 5)**

1. 'பாஞ்சாலி சபதம்' என்ற கவிதை நூலின் ஆசிரியர்

   (அ) வாணிதாசன் (ஆ) உமறுப்புலவர்

   (இ) பாரதியார் (ஈ) கம்பர்

2. எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்று முழங்கியவர்

   (அ) கண்ணதாசன் (ஆ) பாரதிதாசன்

   (இ) மறைமலைஅடிகள் (ஈ) வைரமுத்து

3. 'பசும்பொன்' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு

   (அ) வினைத்தொகை (ஆ) பண்புத்தொகை

   (இ) வேற்றுமைத்தொகை (ஈ) உவமைத்தொகை

4. மாறன் என்றசொல்லின் பொருள்

   (அ) சேரன் (ஆ) சோழன்

   (இ) பாண்டியன் (ஈ) பல்லவன்

5. குடிலனையும் கொடுமையினால் வென்றிருப்பான் என்று சொன்னவர்

   (அ) சிற்பி பாலசுப்பிரமணியன் (ஆ) பாரதியார்

   (இ) கம்பர் (ஈ) திருத்தக்தேவர்



Scanned by CamScanner

II. எவையேனும் நான்கிற்கு சுருக்கமான விடை தருக : **(4 × 5 = 20)**

1. புதுமைப் பெண்ணின் கூற்றினை பாரதியார் வழிநின்று விளக்குக.
2. தொழிலாளர் விண்ணப்பம் என்னும் கவிதையின் கருத்துக்களை சுருக்கி வரைக.
3. வாழ்க்கைத் தத்துவங்களாக கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறுவன யாவை?
4. 'கடல்' என்னும் கவிதையின் கருத்துக்களை விளக்குக.
5. 'தீக்குச்சிகள்' என்னும் கவிதை குறிப்பிடும் ஏழைச்சிறுவர்களின் அவலங்களை விவரி.
6. கவிதையின் பிறப்பிடங்களை கவிஞர் சிற்பி எவ்வாறு காட்சிப்படுத்துகிறார்?

III. எவையேனும் **நான்கிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : **(4 × 3 = 12)**

1. உண்மையிலே தவறாத புலவர்
   உணர்வினி லேஉயர் நாடு.

2. புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
   புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

3. இன்ப உரைகள் தருபவர் ஆர்? வீட்டை
   இன்னகை யாலொளி செய்பவர் ஆர்?

4. மானுடர்கள் ஆத்மாவிற்கு
   வானத்தில்
   கண்ணி வைத்தது யார்?

5. நீயோ
   திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறாய்.

6. கண்மறைந்தவுடன் நம்மை ஏசுகின்றான்

IV. எவையேனும் **நான்கிற்கு** விடை தருக : **(4 × 3 = 12)**

1. பயன்பாட்டுத் தமிழ் என்றால் என்ன?
2. பின்வரும் புலவர்களின் பெயர்களை அகர வரிசைப்படுத்துக.
   கபிலர், பரணர், ஔவையார், காளமேகம், பாரதியார், திருவள்ளுவர்.



Scanned by CamScanner

3. பின்வரும் சொற்களின் பொருள் வேறுபாட்டை எழுதுக :

அரி - அறி

ஒரு - ஒறு

மாரன் - மாறன்

4. பின்வரும் தொடர்களைத் திருத்துக :

கண்ணன் நேற்று வருவான்

மாடுகள் மேய்ந்தது

கலைவாணி வந்தான்.

5. வல்லினம் மிகா இடங்கள் மூன்றினைச் சான்றுடன் விளக்குக.

6. பின்வரும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக :

சம்பிரதாயம், பிரசங்கம், ஜலம்

V. 'நல்வாழ்வு' என்னும் நூலிலிருந்து பின்வரும் தலைப்புகளுக்கு கட்டுரை வடிவில் விடை தருக :

1. நம்பிக்கை (அல்லது) புலனடக்கம் **(8)**

2. எளிமை ஓர் அறம் (அல்லது) நீந்துக **(8)**

VI. எழுத்தர் பணி வேண்டி பாண்டியன் வங்கி மேலாளருக்கு மடல் ஒன்று வரைக. **(5)**

---



Scanned by CamScanner